கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 14.03.2025. அ.வ.எண் . 205/2018. வா.சா.1 . ரமேஷ், த/பெ. ராஜாராம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) தாவாவின் விவரங்கள் நான் கூறியது தானா என்றால் ஆமாம். தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் சரியானவையா என்றால் சரியானவை தான். அவை பத்திரங்களின் அடிப்படையில் தாவாவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள சொத்துக்களின் அளவுகளில் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி அளவானது 100 அடி நீளமும் 45 அடி அகலமும் கொண்டது என்றால் சரிதான். இந்த அளவுக்கு மீறிய சொத்துக்களில் நான் பாத்தியதை கேட்கவில்லை என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி எனக்கு பாத்தியப்பட்ட கிழக்கு பக்க சுற்றுச்சுவரில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் அதற்காக தாவாவை தாக்கல் செய்துள்ளேன். சுவற்று பாத்தியம் மட்டும் தான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2) கிழபுற சுவர் எனக்கு எந்த வகையில் பாத்தியம் என்றால் எனது அம்மாவிடமிருந்து நான் 2006 ம் ஆண்டு கிரயம் பெற்றதன் மூலம் எனக்கு பாத்தியம் ஆகும். சுற்றுச்சுவரை மட்டும் நான் தனியாக கிரயம் பெற்றேனா என்றால் அல்ல மனையோடு சேர்த்து வாங்கினேன். பொதுவாக சுற்றுச்சுவருக்கு எவ்வளவு அகலம் வைப்பார்கள் என்றால் 1 அடி வைப்பார்கள். மேற்படி நான் கோரியுள்ள சுற்றுச் சுவர் பாத்தியத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்த்து

ஒப்பம்/- (R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

அளவீடு செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அவர் தனது அறிக்கையில் 4 அடி அகலத்தில் சுற்றுச்சுவர் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 4 அடி சுவர் வைப்பதற்கு என்ன காரணம் என்றால் 4 அடி சுவரே அங்குகிடையாது , 4 அங்குலத்தில் தான் சுவர் உள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையை படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. ஆனால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையை ஆவணமாக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3)எனது பத்திரமான வா சா ஆ 1, 2 - கிழபுற சுவரே எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. எனது வீடு தெற்கு பார்த்த வீடு என்றால் சரிதான். தென்புறத்தில் கேட், சுற்றுச்சுவர் உள்ளது என்றால் சரிதான். அதன் நீள, அகலம் எனது பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். கேட் - 15 அடி, சுற்றுச்சுவர்- 30 அடி என்றால் சரிதான். மேற்படி கேட் மற்றும் சுற்றுச்சுவரில் 45 அடி முடிந்துவிட்டால் மதில் சுவர் இருக்க வாய்ப்பில்லை என்றால் சுவர் பத்திரத்தின் படி உள்ளது.

4) பத்திரங்களில் சுற்றுச்சுவரின் நீளம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேல்புற சுற்றுச்சுவரில் பொதுவில் சரிபாதி என்று குறிப்பிட்டிருப்பது மேல்புற சரிபாதியா, கிழபுற சரிபாதியா, தென்புற சரிபாதியா என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கேட்டானது சுற்றுச்சுவரில் தான் பொருத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. மதில் சுவருக்கு உட்புறம் ஒரு பிளாக் வைத்து அதில் பொருத்தியுள்ளோம்.

ஒப்பம்/- (R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் கிழபுற சுற்றுச்சுவற்றுடன் கேட் முடிகிறது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5) கிழபுற சுவர் எனக்கு எப்படி பாத்தியம் என்பது குறிப்பிடவில்லை என்றும் அதனால் மேற்படி சுவற்றில் எனக்கு பாத்தியம் ஏற்படாது என்றால் சரியல்ல. கிழபுற சுவற்றை பற்றி சொத்து விவரத்தில் மட்டும் உள்ளது ஷரத்து எதுவும் இல்லாததால் நான் உரிமைகோர உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி சுற்றுச்சுவரானது 4 அடி அகலம், 100 அடி நீளத்திற்கு 3/4 செண்டில் கட்டியிருப்பதால் அதை அபகரிக்கும் நோக்கத்தில் நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை அலைக்கழிக்கும் நோக்கத்தோடு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி